**ஹொரண நகர சபை**
**களுத்துறை மாவட்டம்**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹொரண நகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | இருப்பு பெறுமதியாக பௌதீக இருப்பு கணக்கீடு செய்வதற்கு பதிலாக ரூபா 3,936,747 தொகையான புத்தக பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ii) | முன்னைய ஆண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 228,429 தொகையான ஓய்வூதிய பங்களிப்பு பணம் கணக்கு வைக்கும் போது கடன் கொடுத்தோர் கணக்கில் மாத்திரம் செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (iii) | பொது நிர்வாக நிகழ்ச்சித் திட்டத்தில் ஆளனி சம்பளங்கள் ரூபா 113,632 தொகை மற்றும் ஓய்வூதிய நலன் கொடுப்பனவுகள் ரூபா 13,632 தொகை என்பன அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | பௌதீக திட்டமிடல் மற்றும் வீதி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலதன சொத்துக்களை பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் செலவினம் ரூபா 200,000 தொகை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (v) | மீளாய்வாண்டிற்குரிய பிடியாணை கட்டண வருமானம் ரூபா 177,860 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (vi) | அனுமதிப்பத்திர கட்டண வருமானம் ரூபா 230,121 தொகை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (vii) | மீளாய்வாண்டிற்குரிய வருமான நிதி உதவி ரூபா 99,995 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (viii) | மீளாய்வாண்டிற்குரிய வாடகை வருமானம் ரூபா 307,975 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ix) | மீளாய்வாண்டில் ஆயுர்வேத மருந்துகளை கொள்வனவு செய்தல் ரூபா 9,014,813 தொகை மற்றும் ஆயுர்வேத களஞ்சிய விநியோகித்தல் ரூபா 9,010,009 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 57,552,551 தொகையான 09 கணக்கு விடயங்களுக்குரியதாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 13,860,851 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் பட்டோலைகள் காணப்படாமையினால் ரூபா 101,516,046 கூட்டுத்தொகையான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | | |
| (i) நிதிப் பிரமாணம் 104 | - | நோயாளர் காவும் வண்டி 2018 நவம்பர் 01 ஆம் திகதி ஏற்பட்ட விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த விபத்து தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணையில் காணப்படுகின்றமையினால் அந்த தகவல்கள் பெறப்படும் வரை பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்க முடியாதிருந்தது என அறியத்தருகின்றோம். |
| (ii) நிதிப் பிரமாணம் 371(இ) | 3,761,141 | செயல் நிமித்த முற்பணம் தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iii) | நிதிப் பிரமாணம் 571(1)(2) | - | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குழுவொன்று நியமிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதி 2016/30 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | - | 09 வாகனங்களுக்காக எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். |
| (இ) | 2018 திசெம்பர் 07 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி. | 45,800 | 07 விளம்பர அறிவித்தல் பதாதைகளில் இலிருந்து அறவிட வேண்டிய கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | வர்த்தமானியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது வரையும் அறவிடல்கள் தொடர்பாக அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 33,352,293 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 38,105,742 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர அபிவிருத்தி அதிகார சபையின் நடைமுறைக் கணக்கில் 2009 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 99,885 தொகையான மீதி ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பணத்தை ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்துதல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது ஆக்கபூர்வமான பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 17,310,000 | 17,122,711 | 14,151,134 | 7,002,410 | 17,310,000 | 17,274,634 | 14,797,738 | 5,219,866 |
| (ii) | வாடகை | 8,952,100 | 9,120,082 | 6,788,048 | 2,993,538 | 8,952,100 | 8,494,064 | 6,382,925 | 2,597,165 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 500,000 | 494,000 | 494,000 | - | 421,500 | 305,000 | 305,000 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 25,905,000 | 15,636,593 | 636,593 | 15,000,000 | 25,842,000 | 10,873,887 | 553,719 | 10,320,168 |
| | | 52,667,100 | 42,373,386 | 22,069,775 | 24,995,948 | 52,525,600 | 36,947,585 | 22,039,382 | 18,137,199 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

(அ) வியாபார நிலைய வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கடை வாடகை உடன்படிக்கை காலம் முடிவடைந்த 13 பழைய வியாபார கடைகளின் உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடை வாடகை உடன்படிக்கை செய்யப்பட்ட காலம் முடிவடைந்த கடைகளுக்காக வாடகை உடன்படிக்கை புதுப்பிக்கப்பட வேண்டும். | உடன்படிக்கைக் காலம் முடிவடைந்துள்ள கடைகளுக்காக உடன்படிக்கைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | உப வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள பொதுச் சந்தை கடைகளை சபைக்கு கையேற்று பெறுகை நடைமுறைமையின் பிரகாரம் மீண்டும் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உதவி உள்ளூராட்சி ஆணையாளர் 2019 மார்ச் மாதத்தின் போது அறிவித்த போதும் அவ்வாறு | உப வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள கடைகளை கையேற்று மீண்டும் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடைகளை கையேற்பதற்கும் பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், 02 ஆம் இலக்க கடையில் 2019 ஆம் ஆண்டின் சனவரி முதல் திசெம்பர் வரை ரூபா 48,000 தொகையான கடை வாடகையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | சபைக்குச் சொந்தமான 08 கடைகளில் இருந்து அறவிட வேண்டிய நிலுவை மின்சார கட்டணம் ரூபா 540,935 ஆகும். | சபைக்குச் சொந்தமான கடைகளில் இருந்து அறவிட வேண்டிய மின்சார கட்டண பணத்தை உரிய பிரகாரம் அறவிடல் வேண்டும். | 2020 மார்ச் 31 வரை நிலுவை மின்சாரக் கட்டணம் அறவிடல் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | விநோத வரி<br>------------------------<br>மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை விநோத வரி மீதி ரூபா 1,085,903 ஆக இருந்ததுடன், ஆண்டின் போது அதில் ரூபா 49,814 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நீண்ட காலமாக காணப்படுகின்ற நிலுவைப் பணம் தொடர்பாக வழக்கு தொடரப்பட்டுள்ளது. |

**2.3.3 முத்திரைக் கட்டணம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடம் இருந்தும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 25,000,000 ஆக இருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | பெறவேண்டிய முத்திரைக் கட்டணத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான சகல ஆவணங்களும் மாகாண சபையின் பிரதம செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செயல்நடவடிக்கைத் திட்டம் | | |
| (i) | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயற்பாடுகளின் செயல் முன்னேற்றத்தை அறவிடும் திட்டமொன்று காணப்படவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் நிறைவேறற்ப்பட்ட பணிகளின் செயல் முன்னேற்றத்தை அளவிடும் முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டும். | செயல் முன்னேற்றத்தை அளவிடுவதற்கு பிரிவு தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். |
| (ii) | பாதீட்டில் பௌதீக திட்டமிடல் மற்றும் வீதிகள் செலவினத்தின் கீழ் ரூபா 12 மில்லியன் ஒதுக்கப்பட்ட போதிலும், 2019 இன் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இதற்காக 19.2 மில்லியன் நிதி ஏற்பாடு உள்ளடக்கப்பட்டிருந்தது. | வருடாந்த பாதீட்டின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கழிவுப் பொருள் முகாமைத்துவம் | | |
| | சபை அதிகார பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற உக்காத கழிவுகளை அகற்றுவதற்காக முறையான வேலைத்திட்டமொன்று காணப்படாமை மற்றும் அந்த பணிகள் வெளித்தரப்பினர்களை வருவித்து மேற்கொள்ளப்பட்டமையினால் 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 43,811,000 தொகையான பாரிய செலவினம் ஒன்று செய்யப்பட்டிருந்தது. | கழிவுப் பொருள் முகாமைத்துவம் முறைமைப்படுத்தப்பட வேண்டும். | கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு பொருத்தமான இடமொன்று காணப்படாதிருந்தமையினால் தனியார் துறை நிறுவனம் ஒன்றின் மூலம் இறுதிக் கழிவுகளை அகற்றுதல் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (இ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு | | |
| | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்துதல் தொடர்பாக 2019 – 2020 இற்கு அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்ட போதும், அந்த திட்டத்தில் வறுமையை ஒழிக்கும் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வறுமையை ஒழிப்பதற்கு 04 குடும்பங்களுக்காக கஞ்சி / பால் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

நிகழ்ச்சித் திட்டமாக அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டம் மாத்திரமே அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அவர்களின் வாழ்க்கை நிலையை கட்டியெழுப்புவதற்கும், வறுமை நிலையை ஒழிப்பதற்கும் நீண்ட கால திட்டமொன்று அல்லது வேலைத் திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பயன்படுத்த முடியாதுள்ள கை உழவு இயந்திரத்தை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு ரூபா 15,000 மதிப்பீடொன்று பெறப்பட்டிருந்த போது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏலத்தில் விற்பனை செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள பொருட்கள் ஏலம் இடப்பட வேண்டும். | இது தொடர்பாக இயந்திர பொறியியலாளரின் இணைக்கப்பாட்டு குழுவொன்றின் மூலம் பரிசோதனை அறிக்கையொன்று பெறப்பட்டு ஏலம் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | கழிவுப் பொருள் அகற்றுகின்ற வாகனத்தின் பழுதுபார்த்தல் 2017 ஆம் ஆண்டு முதல் விளைவற்று காணப்பட்டது. | பழுதுபார்த்து பாவனைக்கு எடுக்கப்பட வேண்டும். | பழுதுபார்ப்பதற்கு முடியாதிருந்தமையால் ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (இ) | சிறுவர் விளையாட்டரங்கின் பகுதியொன்று வெளித்தரப்பினரினால் அனுமதியற்ற வகையில் பேணிச் செல்லப்பட்டிருந்த வியாபார நிலையத்தை அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றி ஆதனங்கள் சபைக்கு கையேற்கப்பட வேண்டும். | அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (ஈ) | வேவல முன்பள்ளி பாடசாலை அமைந்துள்ள காணியில் வெளித்தரப்பினரினால் அனுமதியற்ற வகையில் பிடித்து வைக்கப்பட்டிருந்த 10 பேர்ச் காணிப்பகுதியை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றி ஆதனங்கள் சபைக்கு கையேற்கப்பட வேண்டும். | விடயப் பொறுப்பு அமைச்சரிடமிருந்து கிடைக்கின்ற ஆலோசனையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 1994 ஆம் ஆண்டில் சொரணவத்தை ஏலமிடல் காணியில் பொது வசதிகளுக்காக சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள 02 ரூட் 06 பேர்ச் காணிக்கு அடுத்தாலுள்ள காணி உரிமையாளரினால் அனுமதியற்ற வகையில் பிடித்து வைக்கப்பட்ட காணிப் பகுதியை மீளப்பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதியற்று உரிமை கோருகின்ற சபையின் காணிப்பகுதி சபைக்கு கையேற்கப்பட வேண்டும். | சபை சட்டத்தரணியின் ஆலோசனையின் பிரகாரம் அனுமதியற்ற குடியிருப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | நகர சபை பயன்படுத்துகின்ற ஹொரண நூலக கட்டிடம் அமைந்துள்ள காணி, ஹொரண பழைய நகர சபைக் கட்டிடமும் காணியும், பொது விளையாட்டரங்கு, சிறுவர் விளையாட்டரங்கு, சிறுவர் விளையாட்டரங்கிற்கு அருகில் அமைந்துள்ள முன்பள்ளி பாடசாலை, தீயணைப்பு பிரிவு அமைந்துள்ள காணி என்பவற்றிக்கான உரித்துறுதி காணப்படவில்லை. | சபைக்குச் சொந்தமான காணிகளுக்காக அளவிடல் நடவடிக்கைகளை மேற்கொண்டு உரித்துறுதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | உரித்துறுதியை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | வெற்றிடமான செயலாளர் பதவியின் வேலை மேவுகை செய்வதற்கு முகாமைத்துவ உதவி சிரேஷ்ட தரத்தில் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளூராட்சி செயலாளரினால் (மேல் மாகாணம்) உரிய பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ii) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்பட்ட ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர் பதிவிக்கு மேலதிகமாக தற்காலிக வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி பதவியணியினர் ஆட்சேர்க்க முடியாது. | ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர் விடுமுறை சந்தர்ப்பங்களில் கடமைகளுக்காக தற்காலிக வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். |

| | | |
|---|---|---|
| (iii) வருமான பரிசோதகர், தரவு தயாரிக்கும் செயற்படுத்துனர், முன்பள்ளி பாடசாலை ஆசிரியர், வாகன மேற்பார்வையாளர், வேலைக்தள தொழிலாளர், சுகாதார தொழிலாளர், நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் மற்றும் தீயணைப்பு உத்தியோகத்தர் என்ற பதவிகளில் 14 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| **(ஆ) அறவிடப்படாத ஊழியர் கடன்** | | |
| 07 ஊழியர்களிடம் இருந்து 2020 யூலை 31 ஆம் திகதி வரையில் அறவிடப்படாதுள்ள ஊழியர் கடன் ரூபா 201,224 ஆகும். | நிலுவை கடன் மீதி அறவிடப்பட வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |